மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Child community in Sangam Literature

Dr.D.Mohandoss

Assistant Professor, Department of Tamil, Presidency College, Chennai, India

Manuscript ID : **MT1A0003**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 16.08.2021

Revised: 23.08.2021

Accepted: 31.08.2021

Published: 04.09.2021

Pages : 27-39

ABSTRACT:

In today's modern world awareness and research are being conducted on the biological components as children around the world and the solutions to that problems. In Tamilnadu too. Studies are being carried out on works that shape the lives of children. In this context, this article explores the social biographies of children in Sangam literature, which is considered to be one of the world's classical literatures and the historical and cultural treasury of the Tamils.

KEYWORDS:

Children Awareness and Research, Sirariyam, Classical Literature, Cultural and historical background of Tamilans. Sangam Literature, Children Society.

REFERENCES :

1. Prof. Jeyadevan, (P.Au), Penniyam, dhalithyam, Chirariyam, M.Univ., 2012.
2. Kavingar Abdul Rahman, Kavithaigal, (Tamil Ilakiya Varalaru, Janaga Publication.
3. Kavingar Ingulab Kavithaigal.
4. Tholkappiyam, Sol.Porul. Noorpa.
5. Chandra Mohan, R., The Juvenile Justice care and protection of Children Act, 2006.

சங்க இலக்கியத்தில் சிறார் சமூகம்

முனைவர் த. மோகன்தாஸ்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இன்றைய நவீன உலகத்தில் உலகெங்கிலும் உள்ள சிறார்களின் வாழ்வியல் கூறுகள், அவற்றிலுள்ள சிக்கல்கள் அச்சிக்கல்களுக்கானத் தீர்வுகள் குறித்த விழிப்புணர்வுகளும் ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் சிறார்களின் வாழ்வியலைக் கட்டமைக்கும் படைப்புகள் மீது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இச்சூழலில் தமிழர்களின் தொன்மையான இலக்கியமாக, சான்றோர்களின் செய்யுட்களாக, உலகச் செம்மொழி இலக்கியங்களில் ஒன்றாக, தமிழர்களின் வரலாற்றுப் பண்பாட்டுக் கருவூலமாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் சிறார்களின் சமூக வாழ்வியலைக் கண்டறிந்து இக்கட்டுரையாக்கம் வெளிப்படுத்துகின்றது.

கருச்சொற்கள்

சிறார் குறித்த விழிப்புணர்வு, சிறாரியம், சிறாரிய ஆய்வுகள், தொன்மை இலக்கியம், செம்மொழி இலக்கியம், தமிழர்களின் வரலாற்றுக் கருவூலம், பண்பாட்டுக் கூறுகள், சங்க இலக்கிய பாடல்கள், சிறார் சமூக வாழ்வியல்

முன்னுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "பெண்ணியம் தலித்தியம் சிறாரியம்"[1] என்னும் பொருண்மையிலான கருத்தரங்கில் இரண்டு கருத்தாடல்கள் முன் வைக்கப்பட்டன. உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் தலித்துகள் ஒடுக்குமுறை, ஒதுக்குமுறை, தாக்குதல், வன்முறை போன்ற துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். ஆனாலும் தற்போது அவர்கள் ஓரளவு விழிப்புணர்வு பெற்று தன் வலிகளை, வாழ்வியல்கூறுகளைத் தாங்களே படைப்பாளிகளாக மாறி படைத்தும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியும் வருகின்றனர். அதனால் உலகம் முழுவதுமுள்ள மக்களின் பார்வை, ஊடகங்களின் பார்வை இவர்களின் பக்கம் திரும்பி உள்ளன. ஆனால் அவர்களைப் போலவே காலந்தோறும் பலநூறு ஆண்டுகளாக அதே இன்னல்களுக்கு பாலியல் அத்துமீறலுக்கு ஆளாகி வரும் ஒரு சமூகம் சிறார் சமூகம். சிறார்கள் குறித்து 'சிறாரியம்' என்னும் பொருண்மையில் உலகஅளவில் சில தன்னார்வலர்களும் அமைப்புகளும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தாலும் சிறார்களுக்காக குரல் கொடுத்து

வந்தாலும் சிறார்களின் வலி, வேதனைகள், போராட்டங்கள் குறைந்த பாடில்லை. எனவே பேராசிரியர்களாகிய நாம், ஆய்வாளர்களாகிய நாம், படைப்பாளிகளாகிய நாம், செய்ய வேண்டுவன இரண்டு; அவற்றில் ஒன்று சிறார்களைப் பற்றிய புதிய படைப்பாக்கங்களை உருவாக்க வேண்டும். மற்றொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்ட படைப்பாக்கங்களில், மரபான இலக்கண இலக்கியங்களில் காணப்படும் சிறார் பற்றிய தரவுகளைத் திரட்டி ஆய்வுகள் நிகழ்த்த வேண்டும் என்றனர். அக்கருத்தினை ஏற்று சங்க இலக்கியத்தில் சிறார் சமூகநிலைப்பாடுகளை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

உருவாக்கியபடைப்புகளில்

தமிழ் இலக்கியங்களில் அற இலக்கியம், இறைஇலக்கியம் என்னும் பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம் போன்ற இலக்கியங்களில் காணப்படும் சிறார் பற்றிய பதிவுகள், சிறார் நோக்கில் அல்லாமல் குழந்தைகள் பற்றிய பதிவுகளாக ஆங்காங்கே காணப்படுகின்றன. இவை தம் பாடுபொருள்களுக்கு ஏற்றவாறு சிறாரைப் பற்றி பதிவு செய்து உள்ளதே தவிர அவர்களுக்கான உண்மை உலகம் அவற்றில் இல்லை. அதாவது குழந்தைகள்/சிறார்கள் பற்றிய வாழ்வியல் கூறுகளோ சிக்கல்களோ அதற்கானத் தீர்வுகளோ காணப்படவில்லை.

தமிழ் நவீன இலக்கியங்களில் சிறார் பற்றிய 'சிறாரியம்' என்னும் பொருண்மையிலான (பெண்ணியம், தலித்தியம் போன்று சிறார்களின் வலிகளை, வேதனைகளை, பாலியல் தொல்லை, கொத்தடிமை, வறுமை, பசி, குடும்பச்சுமை உள்ளிட்ட வாழ்வியல் கூறுகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் அறிவார்ந்த தளங்களில் முன் வைப்பது) பதிவுகள் ஓரளவு காணப்படுகின்றன.

1979 இல் ராஜம்கிருஷ்ணனின் 'கூட்டுக்குஞ்சுகள்' என்னும் புதினம்சிறார்கள் சிவகாசி பட்டாசு தொழிற்சாலைகளில் படும் வலிகளை முழுவதுமாக பதிவு செய்துள்ளது. அதற்கு அடுத்து பெருமாள்முருகனின் 'கூளமாதாரி' என்னும் புதினம் மாடு மேய்க்கும் தலித் சிறுவனின் வாழ்வியலை முழுவதுமாக பேசுகின்றது. இவற்றைத் தவிர சிறாரியம் பொருண்மையில் அமைந்த புதினங்கள் தமிழில் இல்லை எனலாம். சில புதினங்களில் சிறார்களைப் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன என்றாலும் இவ்வாறான நோக்கில் இல்லை எனலாம். தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் பாதிரியார் பேராசிரியர் ராஜநாயகத்தின் 'சிலிர்ப்பு' என்னும் தொகுப்பு குழந்தை தொழிலாளர்கள் பற்றியது. அன்பாதவனின் 'தீச்சிற்பம்' என்னும் தொகுப்பு செங்கல்சூளை, உணவுவிடுதி, தேனீர்கடை, இருசக்கர பழுது பார்க்கும் கடை, மளிகைகடை, திண்டுக்கல், அலிகார் பூட்டுத் தொழிற்சாலைகளில் சிவகாசி போன்ற பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறார்களின் வறுமை, வலி, குடும்பப்பொறுப்பை தாமே சுமக்கும் நிலைகளை ரத்தமும் சதையுமாக பதிவு

செய்துள்ளது. இவற்றைத் தவிர சிறாரியம் பேசும் சிறுகதைத்தொகுப்புகள் தமிழில் இல்லை எனலாம். தி.ஜானகிராமனின் அம்மா வந்தாள், சிலிர்ப்பு, பி.எஸ். ராமையாவின் நட்சத்திர குழந்தைகள், ஜெயகாந்தனின் தேவன் வருவார், ஒரு பிடி சோறு, கு.அழகிரிசாமியின் அன்பளிப்பு போன்ற சிறுகதைத்தொகுப்புகள் சிறாரிய நோக்கில் அமைந்தவை அல்ல. அன்பளிப்பு கதையில் வரும் சாரங்கன் பாத்திரம் பள்ளி குழந்தைகளின் மனதில் எழும் தாழ்வு மனஉளவியல் உணர்வைப் பற்றியது. ஒருபிடி சோறு சிறுகதை, ராசாத்தி என்னும் பாத்திரத்தின் அனாதையாக்கப்பட்டச் சிறுவனின் நிலையை கொஞ்சம் பேசுகிறது. புதுக்கவிதைகளை பொறுத்தவரையில் அப்துல்ரகுமானின் கவிதைகளில் சில பதிவுகள் காணப்படுகின்றன. சான்றாக

"பொம்மைகள் தயாரிக்கக்

கருப்பையை

நச்சரிக்காதீர்கள்

மெசியாவின் கரங்களில்

ஒட்டடக்கோலைத்

திணிக்காதீர்கள்"[2]

என்ற கவிதையிலும் கவிஞர் இன்குலாப்பின் கவிதைகளிலும் சில கூறுகள் காணப்படுகின்றன. 1995ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சேலம் மாவட்டம் கட்டி நாயக்கன் பட்டியில் உள்ள பள்ளியில் உயர்சாதி மாணவர்களுக்காக வைக்கப்பட்டிருந்த பானையில் தண்ணீர் குடித்ததற்காக ஆசிரியரால் 'தனம்' என்ற தலித் மாணவி தாக்கப்பட்டு கண்பார்வை இழந்ததை,

"அது

துரோணாச்சாரியாரின்கையில்

வில்லாய்இருந்தது

ஆண்டுகள்கடந்தும்

செல்லரிக்காது

வகுப்பறையில்இன்று

பிரம்பாய்நீண்டது"[3]

வைரமுத்து (இந்த பூக்கள் விற்பனைக்கு அல்ல) ப.அமுதா (விரல்கள்) அம்புலி (மீண்டும் துளிர்க்கும் வசந்தம்) போன்றோரின் சில கவிதைகளிலும் ஹைக்கூ பொருத்தவரை அறிவுமதி. மித்ரா. மு.முகேஷ் போன்றோரின் ஒரு சில கவிதைகளைத் தவிர மற்றவையாவும் சிறாரிய நோக்கில் படைக்கப்பட்டவை அல்ல. இவற்றில் இருக்கும் கொஞ்சம் பதிவுகள் கூட சிறார்களை மட்டுமே மையப்படுத்தியவை அல்ல. அதற்கு அடுத்துள்ள சிறுவர் இலக்கியம், குழந்தைஇலக்கியம், சிறுவர் இதழ்கள் போன்ற வகை மாதிரிகள் (கவிமணி,குழ. கதிரேசன், தில்லைகோவிந்தன், மின்னூர் சீனிவாசன் அழ.வள்ளியப்பா) குழந்தைகளுக்கு கற்றல் சார் தூண்டல் உளவியல் நோக்கில் படைக்கப்பட்டவைகளே. அதிலும் சிறாரிய நோக்கு இல்லை.

சாகித்திய அகாதமி கொடுக்கும் ஊக்கம்

இந்திய இலக்கியச்சூழலிலும் தமிழ் இலக்கியச்சூழலிலும் சிறார்கள் பற்றிய படைப்புகள் பெருக வேண்டும் என்ற நோக்கில் சாகித்திய அகாதமி குழந்தைகள் பற்றிய இலக்கியப்படைப்பாளிகளை ஊக்குவிக்க ஆண்டுதோறும் பாலசாகித்திய அகாதமி விருது கொடுத்துவருகிறது. 2012 ஆண்டுக்கான யுவபுரஸ்கார் விருதுமலர்மதி என்பவருக்கு 'தூப்புக்காரி' என்னும் நாவலுக்காக வழங்கப்பட்டது. அதே 2012 இல் கொ.மா. கோதண்டம் அவர்களுக்கு 'காட்டுக்குள்ளே இசைவிழா' (சிறுவர் கதைகள்). 2014இல் இரா. நடராஜன் 'விஞ்ஞான விக்கிரமாதித்தன்' (கதைகள்) 2015இல் செல்வகணபதி 'தேடல் வேட்டை' (கவிதைத்தொகுப்பு). 2016 இல் குழ.கதிரேசன் (ஒட்டு மொத்த படைப்புக்கும்) ஆகியோர்க்கு பாலசாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்பட்டது. அதே ஆண்டில் சபரிநாதன் மற்றும் தேவிநாச்சியப்பன் (அழ. வள்ளியப்பா மகள்) 'வால்' என்னும் கவிதைத் தொகுப்புக்கு யுவபுரஸ்கார் விருது வழங்கப்பட்டது. இந்தச் சூழலில் நம்முடைய வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் சங்க இலக்கியத்தில் சிறார் பற்றிய பதிவுகளைத் திரட்டித் தொகுத்து ஆராயந்து ஆவணப்படுத்தினால் சிறார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் சிறார் குறித்த படைப்புகளும் ஆய்வுகளும் பெருகுவதற்கும் உறுதுணையாகவும் இருக்கும்.

சங்க இலக்கியத்தில் சிறார்

சங்ககால 'சிறார்' சமூகத்தைத் தெரிந்து கொள்ள சங்ககால படைப்புகளாக விளங்கும் சங்க இலக்கியத்தின் வழி ஆராயும்போது அவற்றில் சிறார்களின் வளர்ப்புமுறை, சிறார்களின் உருவத்தோற்றம், சிறார்களின் ஆடைஅணிகலன்கள், சிறார்களின் விளையாட்டுகள், சிறார்பற்றிய போர் பதிவுகள், வாயில்களாக பயன்பட்டநிலை, போன்ற பதிவுகள் காணப்படுகின்றன. இப்பதிவுகளில் சிறார்களைப் பற்றி என்ன மாதிரியான விடயங்கள் காணப்படுகின்றன என்றும் அவையாவும் சிறாரிய

நோக்கில் உள்ளனவா என்றும் பார்ப்போம். அதற்கு முன் இதுகாறும் சங்க இலக்கியத்தில் சிறார் நோக்கில் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளனவா என்று பார்ப்பதும் அவசியமாக தோன்றுகிறது. 2379 பாடல்களைக் கொண்ட சங்க இலக்கியத்தில் வாசிப்பை முன்னிறுத்தும் தோறும் புதுப்புது செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றினூடாக சங்க இலக்கியத்தில் சிறார் குறித்து ஏற்கனவே சில நூல்களும் ஆய்வுகளும் நூலாக்க நோக்கிலும் ஆய்வு நோக்கிலும் தொட்டுச் சென்றுள்ளன. நூலாக்க நோக்கில், கா. சுப்பிரமணியம் - சங்ககாலச்சமுதாயம் (1954). சு.சிவகாமசுந்தரி - சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம். வசந்தா அமர்நாத் - சங்க இலக்கியத்தில் குழந்தைகள் பற்றியக் குறிப்புகள்.

ஆய்வு நோக்கில் நிகழ்த்தப்பட்ட பாலமகேஸ்வரி - சங்கஇலக்கியத்தில் குழந்தைகள் (எம்.ஃபில்). மு. கருணாநிதி - நாட்டார் வழக்காற்றில்; சிறார் வழக்காறுகள் (எம்.ஃபில்), ஆகியநூல்கள், ஆய்வுகள் வெளி வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை யாவும் குழந்தை இலக்கிய நோக்கில் செய்யப்பட்ட ஆய்வுகளாக உள்ளன. சிறாரிய நோக்கில் இல்லை.

சிறார் என்னும் சொல்

சிறார் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் தான் முதன் முதலில் காணப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை ஆகிய மூன்று நூல்களில் சிறார் பற்றிய பதிவுகள் காணப்படவில்லை. ஏனைய பதினைந்து நூல்களில் 190 இடங்களில்சிறார் பற்றிய பதிவுகள் / குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் சிறார் என்னும் சொல் "சிறாஅர்" என்று அளபெடையுடனும் காணப்படுகின்றது. மேலும் சங்கஇலக்கியத்தில் சிறாரைக் குறிக்கப் பிள்ளை, குழவி, மக, குறுமாக்கள், புதல்வர், புதல்வன், மகாஅர், சேய், மகன், பேதை, செல்வன், மழலை, இளையோர், பிள்ளை, கன்று, மகன், மக்கள்பாவை, சிறுமக்கள், கலிமாக்கள், இளையர், செல்வ, மைந்தர், செல்வன், சிறுவிளையாட்டி, சிறுவர், செம்மலை, போன்ற பிற சொற்களும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் சிறார் என்ற சொல்லாடல் காணப்படவில்லை. அதற்குமாறாகத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்தின் புறத்திணையியலிலும் மரபியலும். "பெண்மையரசே மகவே குழவி" "குழவி மருங்கினும் கிழவதாகும்" "குழவியும் மகவும் ஆயிரண்டல்லவை, கிழவ அல்ல மக்கட் கண்ணே" "கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று" "பிள்ளை குழவிகன்றே போத்தெனக்" "பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே".[4] என வரும் தொல்காப்பிய நூற்பாக்களில் குழவி, பிள்ளை, மழலை, மக, கன்று, பார்ப்பு போன்ற சொற்கள் உயர்திணை மற்றும் அஃறிணையைக் குறிக்கும் இளமைப்பெயராகவும் தொல்காப்பியம் சுட்டி இருக்கின்றது.

மேலும் சிறார்களின் வயது வரம்பு குறித்தோ சிறார்களின் திருமண நிகழ்வுகள் குறித்தோ எந்தப் பதிவுகளும் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. தமிழ் இலக்கிய நூல்களில் சிறார்களுக்கான வயது வரம்புகள் குறித்த பதிவுகள் பிள்ளைத்தமிழ் நூல்களிலும் பாட்டியல் நூல்களிலும் வாழ்வில் களஞ்சியங்களிலும் உளவியல் நூல்களிலும் சட்டநூல்களிலும் காணப்படுகின்றன. சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பிள்ளைத்தமிழ் நூல்கள் சிறார்களுக்குரிய வயது வரம்பினைக் கட்டமைக்க முயல்கிறது. ஆண், பெண் என இருவகையாகப் பிரித்து பத்து பத்துப் பருவங்களாக வகுத்து விளக்குகின்றன. என்றாலும் அதில் குழந்தை பிறந்த நாள் முதல் 21 மாதங்கள் வரை உள்ள நிலைகளை மட்டுமே எடுத்துரைக்கின்றது. அதாவது குழந்தைகளின் பத்துப் பருவங்களையும் இரண்டு வயதுக்குள்ளாகவே அடக்கி கூறியுள்ளனவே தவிர குழந்தைப் பருவத்திற்கு முழுமையான வயது வரம்பு இதுதான் என்று தெளிவாக வரையறை செய்யவில்லை. அதே போல உலாநூல்கள் கூறும் வயது வரம்புகளிலும் ஆணுக்கான பாலன் (1-7), மீளி (8-10) மறவோன் (11-14), திறவோன் (15), விடலை (16), காளை (17-30), முதுமகன் (30க்குமேல்) என்றும் பெண்களுக்கான பேதை (1-8), பெதும்பை (9-10), மங்கை (11-14), மடந்தை (15-18), அரிவை (19-24) தெரிவை(25-29), பேரிளம்பெண் (30க்குமேல்) என்று சொல்லப்படுகின்ற பிரிவுகளிலும் சிறார்களுக்கான வயதுவரம்பு சரியாக வரையறுக்கப்படவில்லை. மேலும் வாழ்வியல் களஞ்சியம், உளவியல் நூல்கள் கூறும் வயதுவரம்புகளும் சரியான வரையறையாகத் தோன்றவில்லை. இந்நிலையில் "குற்றவியல் நடைமுறைச் சட்டம்பிரிவு 27ன்படியும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு (v.376) படியும் அவற்றில் செய்யப்பெற்றத் திருத்தத்தின்படியும் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் (juvenile)"[5] என்று சட்டம் சொல்வது பொருந்துவதாக உள்ளது. எனவே குழந்தை பிறந்ததிலிருந்து பதினேழு வயது முடியும் வரை (அதாவது பதினெட்டு வயதுக்குட்பட்டவரை) உள்ளவர்களை ஆய்வின் நோக்கம் கருதி 'சிறார்' என்னும் வரையறைக்குள் கொண்டு வரலாம் எனத் தோன்றுகிறது. இவ்வரையறையின் கருத்தோட்டத்தில் சங்க இலக்கியத்தில் சிறார் பற்றிய பதிவுகளைப் பார்க்கலாம்.

சிறார் வளர்ப்பு

சங்க இலக்கியத்தில் சிறார் வளர்ப்பு குறித்தப் பதிவுகள் அதிகம் காணப்படுகின்றன. வளர்ப்பு பதிவுகளில் பிள்ளைப்பேறு, பெற்றோரின் அன்பு போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. அதில் ஆண்பிள்ளைகளைப் பெற விரும்பியதை போலவே பெண்பிள்ளைகளையும் பெற விரும்பியதை,

"குன்றக்குறவன்கடவுள்பேணி

இரந்தனர்பெற்றஎல்வளைக்குறுமகள்"[6]

"வாங்குகோல் நெல்லொடு வாங்கி, வருவைதல்

குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி"[7]

முதலியப் பாடல்கள் காட்டுகின்றது. பிள்ளை வளர்ப்பு முறையில் செல்வ செழிப்புடனும்" இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்"[8]. அதே வேளையில் சிலர் வறுமையிலும் "புல் உளைக் குடுமிப் புதல்வன்பால் மாண்பால் இல்வறு முலைசுவைத்தனர் பெறாஅன்[9] அதாவது தாய்க்கு உணவு இன்மையால் பால்சுரத்தல் நின்ற முலையைச் சுவைத்துச் சுவைத்து பால் வராமல் பிள்ளை அழும் காட்சியை அறிய முடிகின்றது. இவ்வாறு சங்ககாலச் சிறார் வளர்ந்துள்ளனர், வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகின்றது. சிறார்களின் நடைஅழகு, மொழிஅழகு, மென்மைத்தன்மை, தாயிடம் ஒட்டி வருதல் போன்றப் பதிவுகளும் நிரம்பக் காணப்படுகின்றன.

சிறார்களுக்குப் பயிற்றுவித்தல்

அகப்புறத்திணைக் கட்டமைப்பில் அந்தந்த நிலம் சார்ந்து வாழ்ந்த மக்கள் தம் பிள்ளைகளுக்கு அந்தந்த நிலம் சார்ந்த தொழில்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் பயிற்றுவித்துள்ளனர். குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் தங்கள் தொழிலான வேட்டையாடுதல், தேனெடுத்தல், கிழங்கழத்தல், திணைவிதைத்தல், திணைகாத்தல் போன்றத் தொழில்களையும் முல்லைநிலமக்கள் தம் தொழிலான ஆநிரை மேய்த்தல், பால், நெய், தயிர் விற்றல், போன்ற தொழில்களையும் மருதநிலமக்கள் உழுதல், உழுதுவித்தல், போன்றத் தொழில்களையும் நெய்தல் நில மக்கள் மீன்பிடித்தல், மீன் உலர்த்தல், உப்புவிற்றல் போன்றத் தொழில்களையும் தம் குழந்தைகளுக்கு காட்டியும் பயிற்றுவித்தும் உடனிறுத்தியும் கற்பித்தும் வந்துள்ளனர். இக்கருத்திற்கு வலு சேர்க்கும் வகையில் "சங்கத்தமிழ் இயல்" என்னும் நூலில் சா.சிவகாமி அவர்கள் திணைநிலை குடியினர் தங்களின் தொழிலுக்கு உதவும் வகையில் சிறுவர் சிறுமியரை பழக்கியிருந்தார்கள் என்றும் சிறு குறுந்தொழுவர், ஊர்க்குறுமாக்கள், சிறுதொழில் மகாஅர், என்பன போன்றச் சொற்கள் சங்ககாலப் பெற்றோர்கள் தம் தொழிலுக்கு உறுதுணையாக இருக்க சிறார்களுக்குப் பயிற்றுவித்துள்ளனர் எனக்காட்டுகின்றது என்றும் கூறுவது. பொருத்தம் உடையதாக இருக்கின்றது. சிறார்களுக்கு இவ்வாறு தம் தொழிலை (குறுந்-394), நல்லொழுக்கங்களை (புறம் 173), கல்வியை (புறம்183), சொல்வன்மையை (கலி81), இசைக்கருவிகளை (புறம்242), வழிபாடுமுறைகளை

(மது461-465), உறவுமுறைப் பெயர்களை (மலைப184-185), விருந்தோம்பல் முறைகளை முதலியவற்றைப் பயிற்றுவித்ததாகவும் பதிவுகள் காணப்படுகின்றன.

சான்றாக; பானைவனையும் குயவர்கள் தம் சிறார்களுக்கு அத்தொழிலை முறையாகப் பயிற்றுவித்தாகப் புறநானூற்றுப் பாடலொன்று காட்டுகின்றது.

“தொல்நிலக் கிழமை சுட்டின், நல்மதி

வேட்கோச்சிறாஅர் தேர்க்கால் வைத்த

பசுமண் குரூஉத் திரள்போல” [10]

அடுத்ததாகச் சிறார்களின் உடல், தலை, கண், வாய், போன்ற உருவத்தோற்றங்கள் பற்றியப் பதிவுகள் காணப்படுகின்றன. அதிலும் 'புன்தலைச்சிறாஅர்' 'கயந்தலை சிறார்' என்று பெரும்பாலான இடங்களில்வந்துள்ளன.

இதற்கான காரணங்களையும் சில பாடல்கள் போகிற போக்கில் பதிவு செய்துள்ளன.பெற்றோர்களின் குலத்தொழிலைப் பிள்ளைகளும் செய்துள்ளனர் வண்ணார் தொழிலை மேற்கொண்டு துணி வெளுக்கின்றனர் பெற்றோர் என்றும் அவர்களுக்கு உதவும் வகையில் சிறுவர்களும் உவர் மண்ணை தலையில் சுமந்து கொண்டு வந்து கொட்டுகின்றனர் என்றும் உவர் மண்ணைச் சுமந்ததால் தேய்ந்து போன ஊன் பொருந்திய தலையையுடைய சிறுவர்கள் என்றும் அகநானூறு பாடல் ஒன்று கூறுகின்றது.

“திருந்துஇழை நெகிழ்ந்து, பெருந்தோள் சாஅய்,

பூக்கண் மறைந்த புன்தலைச்சிறாஅரொடு

அவ்வரி கொன்ற கறைசேர்வள் உகிர்ப்” [11]

இப்பாடல்களின் வழி சங்ககால சிறுவர்களில் சிலர் உடல் மெலிந்து தலை சிறுத்து வறுமையில் இருந்ததற்கானக் காரணங்களை அறியமுடிகின்றது.

மேலும் சிறார்களின் ஆடைஅணிகலன்கள் பற்றிய பதிவுகளும் காணப்படுகின்றன.

ஆடைஅணிகலன்கள்

சிறார்களின் ஆடைஅணிகலன்கள் குறித்தப்பதிவுகள் சங்க இலக்கியத்தில் குறைவாகவே காணப்படுகின்றன. வெண்ணிறஆடை (புறம்279) பூங்ரைநீலம்புடைதாழ (கலி-111) இடைகாட்டும் உடைகளில் ஆம்துகில்-(கலித்81) போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. சிறார்களின் அணிகலன்களாக புலிப்பல் தாலி, ஐம்படைத்தாலி,

கிங்கினி, தொடி, (கலித்- 81, 85, 86,) (அகநா-7,54,) போன்ற அணிகலன்கள் இருபாலரும் அணிந்துள்ளனர் எனக்காட்டுகின்றது. சங்கஇலக்கியத்தில் சிறார் அணிகலன்களாகப் பதினாறு வகை அணிகலன்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஆண்சிறார்களின் அணிகலன்களாக 1) கிண்கிணி 2) பொற்காசு 3) பவளக்கோவை 4) அவிர்தொடி 5) ஏறியாவாள் 6) எற்றாமழு 7) ஆனேற்றுஅவிர்பூண் 8) முத்துமாலை 9) கண்ணி 10) மூன்றுவடமால 11) கைக்காணி 12) புலிப்பல்தாலி 13) ஐம்படைத்தாலி எனப்பதி மூன்றும் பெண்சிறார்களின் அணிகலன்களாக 1) புலிப்பல்தாலி) 2) ஐம்படைத்தாலி 3) கிண்கிணி என மூன்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறார் விளையாட்டுகள்

சிறார்களின் விளையாட்டுகளை மட்டும் குறிப்பிடும் தனிப்பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அதாவது தலைமக்களைப் பற்றி, சிறுவயது நிகழ்வுகளைப் பற்றிக் கூறும்போது என்னென்ன விளையாட்டுகளை விளையாடினார்கள் என்று கூறப்பட்டுள்ளன. அவற்றினூடாக சில விளையாட்டுகளை பொதுவான விளையாட்டுகள் பெண்சிறார் விளையாட்டுகள் என விளக்கலாம். பொதுவான விளையாட்டுகள் என்பதிலேயே ஆண்சிறார் விளையாட்டுக்களும் வந்து விடுகின்றன. அவை சிறுதேர் உருட்டல் (குறுந்61), கிளுகிளுப்பு (சிறு-55-62), பணங்குதிரை இழுத்து விளையாடியது(நற்றி-220) அம்புலியைக் காட்டி (புறம் 160), சிறுபறை அடித்து (நற்றி 58-104), தெருவில் விளையாடுதல் (கலி 83), யானை (மரப்பாச்சி) பொம்மையை வைத்து (கலி 86), எலி முயல் உடும்புமீது அம்பு எய்தி (புறம் 322), வட்டாடி (நற்றி-3. அகநா-5). மீன்பிடித்து (நற்றி-111). யானைக்கன்றுகளுடன் (குறுந்-394). எருமையின் மீது அமர்ந்து (அகம்-206). நீரில் விளையாடுதல் (புறம் 94,104. பட்டின-60-75). குரங்கு, மான், வெள்ளாட்டு குட்டிகளுடன் (நற்றி-95. அகம்-104). தந்தை மார்பில் ஏறி (அகம்-197). தென்னங்காய்களை வைத்து (புறம்-61). வைக்கோல் போர் மேலேறி (புறம்-61). ஆரவார ஒலி எழுப்பி (குறுந்-241). நுங்கை உண்டுமகிழ்ந்து(நற்றி-392). போன்றஇருபாலரும் ஆடிய பொது விளையாட்டுகளாக காணப்படுகின்றன பெண்சிறார் விளையாட்டுகளாக "புதைத்து வைத்த புன்னை விதை சிறப்பாக வளர தண்ணீர் ஊற்றி விளையாடுவது (நற்றிணை 172), கழங்கு, பந்து விளையாடுவது (அகம் 17, 49, 225) போன்ற விளையாட்டுகள் குறித்த பதிவுகளும் காணப்படுகின்றன. சான்றாகச் சங்ககாலச் சிறார்கள் பணங்குதிரை இழுத்து விளையாடியதை நற்றிணைப் பாடலொன்று இப்படிக் காட்டுகின்றது.

"சிறுமணி தொடர்ந்து பெரும் கட்சு நிறீஇ

குறுமுகிழ் எருக்கங் கண்ணி சூடி,

உண்ணாநல்மாப் பண்ணி எம்முடன்

மறுகுடன் திரிதரும்

சிறுகுறுமாக்கள்" [12]

இவ்வாறன விளையாட்டுகளைச் சங்ககாலச்சிறார்கள் தம் எதிர் காலவாழ்க்கைக்குத் தேவையான ஒரு பயிற்சி களமாக பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

போர்பதிவுகள்

சங்கப் பாடல்களில் சிறார்களின் வீரம் அல்லது போர்நிகழ்வுகள் வெளிப்படுவதுபோல் நேரடியாகவோ தனிப்பாடல்களாகவோ பாடப்படவில்லை. சிறார் பற்றிய போர் பதிவுகள் யாவும் தாயின் கூற்று மூலமோ தந்தையின் செயல்பாடு மூலமோ அல்லது சிறுவயது நினைவு கூறுதல் மூலமோதான் வெளிப்படுகின்றது. தாய் தன் மகனை போருக்கு அனுப்புவதாக வரும் பாடலில் (புறம்279). அரசன் சிறுவயதிலேயே வீரமிக்கவனாக இருந்தான் என்று தாய் தன் மகனுக்குச் சொல்வதாகவும் வரும் பாடலில் (புறம்-4,77). 'களிறுஎறிந்துபட்டனன்' (பூங்கணுத்திரையார்- 277) 'நின்மகன்யாண்டு உளனோ' (காவற்பெண்டு -86) போரில் புறமுதுகிட்டு ஓடாத உறுதிமிக் தன்மகனின் வீரத்தை கண்டு மனம் மருகும் ஒரு தாயின் உள்ளத்தை (ஔவை- 295) படுமகன்கிடங்கைகாணூஉ (புறம்-228) போன்ற இடங்களிலும் மற்றும் புறம் 286,276,312,24, போன்ற பாடல்களிலும் போர் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. தனக்கு மகன் பிறந்தான் என்ற செய்தி கேட்டு போர்களத்திலிருந்து அதியன் போர் கோள உடையோடு தன் மகனை வந்து பார்த்தான் என்பதை ஔவையார்,

"செறுவர் நோக்கிய கண் தன் சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனதே"[13]

என்ற பதிவுகளிலும் சிறார்களின் வீரம் வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

வாயில்களாக சிறார்

அகமாந்தர்களின் உணர்வு வெளியீட்டிற்கும் உறவுநிலைப் பேற்றிருக்கும் வாயில்போன்று அமைந்து விளங்குபவர்களை வாயில்கள் என்பர். தொல்காப்பியர் குறிப்பிடும் பன்னிருவரில் சிறார்கள் இடம்பெறவில்லை என்றாலும் 'இன்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்' (தொல், கற்பு- 31) எனத் தலைவியின் கூற்றிலும்

'இன்னகைப் புதல்வனைத் தழிஇ இழையணிந்து பின்னர் வந்த வாயில் கண்ணும்' (தொல், கற்-10) என்னும் காமக்கிழத்தியின் கூற்றிலும் புதல்வன் வாயிலாக அமைந்து விளங்குதலைக் காணலாம்.

நம்பியகப்பொருள் சிறார் வாயிலாக செயல்பட்டனர் எனக் கூறுகின்றது. சங்க இலக்கிய பாடல்களில் 'மகன் வயின் பெயர் தந்தேனே (அகம்-26)' 'புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து' (நற்றி.370) புதல்வன் தாய் (அகம்-6) ஐங்குறுநூறு பாடல் ஒன்று தலைவன் பரத்தையின்பால் சென்றிருந்தான், தன் புதல்வனைக் காண வேண்டும் என்ற வேட்கையினாலும் தலைவியைக் காணவும் வந்தான். ஆனால் தலைவியானவள் மிகுந்த ஊடல்கொண்டு 'பரத்தை என்னை தான் பார்க்க விடவில்லை புதல்வனைக் கூடவா பார்க்கவிடவில்லை' என்று பலமாக ஊடல்கொண்டு தலைவனை ஏசுகின்றாள் என்பதை,

“உடலினென்அல்லேன்; பொய்யாதுஉரைமோ:

யார்அவள், மகிழ்ந! தானே- தேரோடு,

தளர்நடைப்புதல்வனைஉள்ளி, நின்

வளமனைவருதலும், வெளவியோளே” [14]

என வருவதைக் காணலாம். இவ்வாறு சிறார்கள் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாகச் செயல்பட்டதை அறிய முடிகின்றது. சிறார்கள் வாயில்களாக செயல்படும் இடங்களில் புதல்வன்தாய், சிறுவன் தாயே, என்ற சொற்களே மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. ஆதலால் ஆண் சிறாரை மையமிட்டே கூறியுள்ளனர் எனத் தெரிகின்றது. தலைவனின் ஊடலை சிறார்களே நேர் நின்று பேசி தீர்த்து வைப்பதாக பாடல்கள் பாடப்படவில்லை. அது இயலாததும் கூட, ஆதலால் அவர்கள் ஆங்கு ஓர் இணைப்புப் பாலமாகவே செயல்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

முடிவுரை

- சிறார் என்னும் சொல் சங்க இலக்கியத்தில்தான் முதன்முதலில் காணப்படுகின்றது. அதன் பிறகு உள்ள அற, இறை, காப்பியம், சிற்றிலக்கியங்கள் வரையுள்ள இலக்கியங்களில் சிறார் என்ற சொல் காணப்படவில்லை. மீண்டும் அச்சொல் இக்கால இலக்கியங்களில் தான் காணப்படுகின்றன.
- சங்க இலக்கியத்தில் சிறார் பற்றிய பதிவுகள் 190 பாடல்களில் காணப்படுகின்றன. அவை தனி பாடலாகவோ நேரடி கூற்றுகளாகவோ இல்லை.
- முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றிலும் சிறார் பற்றி பதிவுகள் காணப்படவில்லை.

- சங்க இலக்கியத்தில் சிறார்களில் உலகம் பெற்றோர்களின் ஊடாகவே வெளிப்படுகின்றது.
- ஒவ்வொரு திணை நில மக்களும் தங்களின் கைத்தொழிலை தம் சிறார்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களை அறிவார்ந்தவர்களாக வளர்த்துள்ளனர்.
- சிறார்கள் தம் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துபவர்களாகவும் சமூகமதிப்பு உருவாக (மலடி குறை நீங்குதல், போருக்குச் செல்ல சிறார் துணையாக நிற்றல்) காரணமாணவர்களாகவும் இருந்துள்ளனர்.
- சிறார்கள், விளையாட்டை எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஒரு பயிற்சிக் களமாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர் எனத்தெரிகின்றது.
- சிறார்களை வீர உணர்ச்சி மிக்கவர்களாக ஏற்படுத்தியதில் சங்ககால பெற்றோர்கள் பெரும் துணையாக இருந்துள்ளனர்.
- சிறார்களும் தம் தந்தை செய்யும் தொழிலுக்கு (தன் தந்தையோடு நாள் முழுவதும் உவர்மண் சுமந்து) சிறு உதவியாக இருந்துள்ளனர் சிறு வயதிலேயே உழைக்க வேண்டியதாக இருந்ததால் உடல் மெலிந்து (அகம்-387) காணப்பட்டுள்ளனர்.
- சங்க இலக்கியங்கள் சிறார்களின் செல்வச்செழிப்பு பற்றிப் பேசிய அதே வேளையில் மற்றொரு புறம் சிறார்கள் உணவு இன்றி, ஆடை இன்றி, உடல் மெலிந்து வறுமையில் வாழ்ந்த நிலையையும் பதிவு செய்துள்ளன. இவற்றில் கொஞ்சம் சிறார் போக்கு உள்ளது எனலாம்.
- தமிழரின் அகவாழ்வில் நேரடியாக வாயில்களாக சிறார்கள் செயல்படவில்லை என்றாலும் தாய்தந்தையர் ஊடலைத் தீர்க்கும் ஓர் இணைப்புப் பாலமாக செயல்பட்டு உள்ளதை சங்க இலக்கியப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.
- இருப்பினும் இன்றைய சூழலில் பேசப்படும் சிறாரியம், அது கட்டமைக்கப் படும் பொருண்மை நோக்கில் சங்க இலக்கியத்தில் பதிவுகள் காணப்படவில்லை என்றாலும் சிறார்கள் பற்றிய- அதற்கான அடிப்படைக் கூறுகள் சங்க இலக்கியத்தில் நிரம்ப காணப்படுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. பேரா. ஜெயதேவன் (ப.ஆ.), பெண்ணியம் தலித்தியம் சிறாரியம், செ. ப.-2012.
2. அப்துல்ரகுமான்-கவிதைகள்.
3. கவிஞர் இன்குலாப்-கவிதைகள்.
4. தொல்காப்பியம்-சொல்,பொருள், நூற்-57./545 548,558,567,568,614.)
5. Chandra Mohan, R.The juvenile justice care and protection of children Act,2006,P.13.
6. ஐங்குறு,பா. எண்-257.
7. கலித்தொகை- பா. எண்-50.
8. புறம்,பா.எண்-188.
9. மேலது, பா.எண்-160.
10. மேலது,,பா.எண்-32.
11. அகம்,பா.எண்-387
12. நற்றி,பா.எண்-220.
13. புறம்,பா.எண்-100.
14. ஐங்குறு-பா.எண்-66.

துணைநூற்பட்டியல்

1. பேரா. ஜெயதேவன் (ப.ஆ.), பெண்ணியம் தலித்தியம் சிறாரியம்.
2. அப்துல்ரகுமான்-கவிதைகள்.
3. தொல்காப்பியம்-சொல்,பொருள், நூல்
4. கவிஞர் இன்குலாப்-கவிதைகள்.